DINAMALAR

PAGE NO: 02 DATE: 22.11.2023

தினமலர்
புதுச்சேரி | புதன் | 22.11.2023



புதுச்சேரி பல்கலை, சுப்ரமணியபாரதி தமிழ் மொழி இலக்கியப் புலம் சார்பில் வள்ளலாரின் படைப்புகளும் பணிகளும் என்ற தலைப்பில் கரத்தரங்கு நடந்தது.

# புதுச்சேரி பல்கலை.,யில் வள்ளலார் சிறப்பு கருத்தரங்கு

**புதுச்சேரி, நவ. 22–**

புதுச்சேரியில் பல்கலை.,யில், 'வள்ளலார் 200' சிறப்பு கருத்தரங்கு நடந்தது.

புதுச்சேரி பல்கலை, சுப்ரமணியபாரதி தமிழ் மொழி இலக்கியப் புலம் மற்றும் புதுச்சேரி மண்டல இந்திரா காந்தி தேசிய கலை மையம் சார்பில், 'வள்ளலார் 200 – வள்ளலாரின் படைப்புகளும் பணிகளும்' என்ற தலைப்பில், கருத்தரங்கு நடந்தது.

இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் மண்டல இயக்குநர் கோபால் வரவேற்றார். பல்கலை இயக்குநர் தரணிக்கரசு குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து, கருத்தரங்கு ஆய்வு மலரை வெளியிட்டு, பேசினார்.

தமிழியற்புல இயக்குநர் நளினி தம்பி வாழ்த்தி பேசினார். அருங்காட்சியக இயக்குநர் அறிவன், வள்ளலாரை ஒரு கோட்பாட்டாளராக முன்வைத்து, திராவிடத்தாலும் ஆரியத்தாலும் போற்றப்பட்டவர் என, கூறினார்.

வள்ளலாரின் படைப்புகளும் பணிகளும் என்ற ஆய்வுக் கருத்தரங்கம் இரண்டு அமர்வுகளாக நடத்தப்பட்டது. பட்டம்மாள், கார்த்திகேயன், அசோகன், அருணாசலம், சிவக்குமார், முருகையன், ரவிக்குமார், ரவிச்சந்திரன், ஸ்ரீவித்யா உள்ளிட்ட 10 பேராசிரியர்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். தனலட்சுமி தொகுத்து வழங்கினார்.

கருத்தரங்கில் மாணவர்கள் ஆசிரியர்கள் ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர். வள்ளலாரின் ஆறாம் திருமுறைகள் நூலினைப் புரவலர் ஜெயமூர்த்தி ஆய்வாளர்களுக்குப் பரிசாக வழங்கினார். பழனிவேலு கருத்தரங்கினை ஒருங்கிணைத்தார். லட்சுமிதத்தை நன்றி கூறினார்.